வழங்கக்கூடிய திறனும் இருக்க வேண்டும், அதேநேரத்திலே 5 இலட்சம் ரூபாய் வருவாய் கிடைக்க வாய்ப்பு இருந்தால், சங்கம் தொடங்கப்படும். அந்த விவகார எல்லையில் அதுபோன்ற வாய்ப்பு இல்லை என்றால், சங்கம் தொடங்க முடியாது என்பது கூட்டுறவு விதி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 396, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

396—

உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை

***35008—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை. தொழில் முனைவோர் தகுந்த தொழில் முதலீட்டோடு முன்வருவார்கள் என்றால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பரிசீலித்து, தொழில் தொடங்குவதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

2014 ஆகஸ்ட் 11]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சலைப் பொறுத்தவரையில், உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலை என்றால் அது மீன் பதப்படுத்தும் தொழிற்சாலைதான். தேசிய அளவில், வருடத்திற்கு நம் நாட்டிற்குக் கிடைக்கும் மீன், 47 இலட்சத்து 12 டன் ஆகும். தமிழகத்தில் கிடைக்கும் மொத்த மீன்கள் 6 இலட்சம் டன்கள் ஆகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 50,000 டன் மீன்கள் கிடைக்கின்றன. பலவகை உயர் ரக மீன்கள், வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை மட்டும் கேளுங்கள். நீங்கள் விளக்கமாக மானியக் கோரிக்கைமீது பேசுவது போல் பேசாதீர்கள். கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள வியாபாரிகள் மீன்களை வாங்கி* process *செய்து விற்பனை செய்து அதிக இலாபம் பெறுகிறார்கள். மீன் கிடைக்கக்கூடிய சீசனைப் பொறுத்தவரையில்,* lean season *என்றும்* fat season *என்றும் வகைப்படுத்துகிறார்கள்.* Fat season*–ல் அதிகமான மீன்கள் கிடைக்கின்றன. அவற்றை கெடாமல் சேமித்து வைப்பதற்கும்,* process *செய்வதற்குமான வசதி இல்லை. இதனால் மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதனைச் சேமித்து வைத்து,* process *செய்வதற்கு மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை இந்த அரசு அமைத்துத் தந்தால், மீன்கள் கெட்டுப்போகாமல் பாதுகாக்க முடியும்; அரசுக்கு மிகுந்த பலனும் கிடைக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒரு கேள்வியை மட்டும் கேளுங்கள். நீங்கள் விளக்கமாகப் பேசிக்கொண்டிருந்தால் எப்படி?*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *இதன்மூலம் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, 50,000 டன் மீன்கள் கிடைக்கக்கூடிய குளச்சல் பகுதியில் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கைக்கு 'இல்லை' என்று பதில் சொல்லவில்லை. தொழில் முனைவோர் அங்கு தொழில் துவங்க முன்வந்தால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்றுதான் சொல்கிறோம். அதுமட்டுமல்லாமல், அருகில் இருக்கக்கூடிய தூத்துக்குடியில் 294 ஏக்கர் பரப்பளவில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. அந்தப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள் அங்கே தொழில் துவங்குவதற்கு முன்வந்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உதவி செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 397, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

397—

பேருந்து வசதி

***36890—திரு. அ. பாஸ்கர்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம், தருமபுரி மண்டலம் சார்பில், தருமபுரி–சென்னை வழித்தடத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் கொடி அசைத்து துவக்கி வைக்கப்பட்டு 23–1–2013 முதல் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.